# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 8, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பாதுகாப்பு மற்றும் அரசியல் துறையில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ள வங்கதேசமும், துருக்கியும் முடிவு செய்துள்ளன.

(i) வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்த துருக்கி வெளியுறவுத் துறை அமைச்சர் ஹாகன் பிடன், வங்கதேச பிரதமர் தாரிக் ரஹ்மானை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போது, ரோஹிங்கயா அகதிகள் பிரச்னை, பருவநிலை மாற்ற விவகாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு, கூட்டுத் தயாரிப்பு, பரஸ்பரம் பயனளிக்கக்கூடிய பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். அப்போது, வங்கதேசம்-துருக்கி இடையே இருதரப்பு உறவை வலுப்படுத்தும் வகையில், பாதுகாப்பு துறையிலும், அரசியல் துறையிலும் இரு நாடுகளும் ஒத்துழைப்பை ஏற்படுத்தி கொள்வதென்றும், இதற்காக அமைச்சர்கள் நிலையில் கூட்டுக் குழுவை ஏற்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

(ii) மேலும், 81-வது ஐ.நா. பொதுச் சபை தலைவர் தேர்தலில் போட்டியிட்ட தங்கள் நாட்டு வேட்பாளருக்கு துருக்கி ஆதரவு தெரிவித்ததற்கு வங்கதேசம் சார்பில் நன்றியை அந்நாட்டு பிரதமர் தாரிக் ரஹ்மான் தெரிவித்துக் கொண்டார். மேலும் வங்கதேசத்தில் துருக்கி அதிபர் எர்டோகன் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும் என்றும் தாரிக் ரஹ்மான் அழைப்பு விடுத்தார்.

2. 28 ஆண்டுகளுக்குப் பிறகு நார்வே அணி உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

3. அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோவில் உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் ஆட்டங்கள் நடைபெறவுள்ள 16 மைதானங்களில், 13 மைதானங்கள் சுற்றுச் சூழலை பாதிக்காத பசுமை கட்டடங்களுக்கான பிரபல 'லீட்' சான்றிதழை பெற்றுள்ளன. சூரிய ஒளி மின்தகடு மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது, நீர் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பதன் அடிப்படையில் அவை அந்த சான்றிதழை பெற்றுள்ளன.

(i) இது உள்பட, உலகக் கோப்பை போட்டியால் மாசு ஏற்படுவதை தடுக்கும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஃபிஃபா தெரிவித்துள்ளது. எனினும், 3 நாடுகளில், 48 அணிகள் பங்கேற்கும் இந்த உலகக் கோப்பை போட்டியில், அணிகள் மற்றும் ரசிகர்களின் விமான போக்குவரத்தால், சுற்றுச்சூழலை பாதிக்கும் கரியமிலவாயு வெளியீடு அதிகமாக இருக்கும் என சூழலியல் ஆய்வாளர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

4. எஃப்1 கார் பந்தயத்தின் 8- ஆவது ரேஸான மொனாகோ கிராண்ட் ப்ரீயில், இத்தாலி வீரரும், மெர்சிடஸ் டிரைவருமான கிமி ஆன்டனெலி வெற்றி பெற்றார்.

5. இந்திய தடகள சீரிஸில் ஆடவர் 100 மீட்டர் ஓட்டத்தில் விமானப் படை வீரர் ஹர்ஜித் சிங் 10.17 விநாடிகளில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார்.

6. புணே கிராண்ட் டூர் சைக்கிள் பந்தயத்தை, உலகின் 4-ஆவது கிராண்ட் டூர் போட்டியாக அறிவிக்க ஆதரவளிப்பதாக, சர்வதேச சைக்கிளிங் சங்கம் (யுசிஐ) இந்தியாவுக்கு உறுதியளித்தது.

7. முன்னாள் சர்வதேச கிரிக்கெட் நடுவர் வி.விக்ரம் ராஜு (92) பெங்களூரில் காலமானார். 1986-இல் சென்னையில் இந்தியா ஆஸ்திரேலியா மோதி, டை ஆன பிரபல டெஸ்ட் கிரிக்கெட்டில் இவர் நடுவராகச் செயல்பட்டவர்.

8. பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரெவ் சாம்பியன் ஆனார். இறுதிச்சுற்றில், இத்தாலியின் ஃப்ளாவியோ கோபோலி வீழ்த்திய அவர், தனது நீண்டகால கனவான முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார்.

(i) மாஸ்டர்ஸ் போட்டிகளில் 7 பட்டங்கள், ஏடிபி ஃபைனல்ஸில் இருமுறை சாம்பியன், ஒலிம்பிக் தங்கம் என டென்னிஸின் எல்லா முக்கியமான போட்டிகளிலும் முத்திரை பதித்துள்ள ஸ்வெரெவுக்கு, கிராண்ட்ஸ்லாம் மட்டுமே கைக்கெட்டாமல் இருந்த நிலையில், தற்போது அதுவும் வசப்பட்டது.

(ii) கடந்த 89 ஆண்டுகளில், பிரெஞ்சு ஓபனில் சாம்பியனான முதல் ஜெர்மனி வீரராக ஸ்வெரெவ் பெருமை பெற்றார். இதற்கு முன் 1937-இல் ஹென்னெர் ஹென்கெல் இங்கு வாகை சூடினார்.

(iii) ஓபன் எராவில் (1968-க்குப் பிறகு) கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற 3- ஆவது ஜெர்மனி வீரர் ஸ்வெரெவ் ஆவார். போரிஸ் பெக்கர் (1996-ஆஸ்திரேலிய ஓபன்), மைக்கேல் ஸ்டிச் (1991-விம்பிள் டன்) ஆகியோர் முதலிருவர்.

9. இந்தியாவின் எரிசக்தி தேவை பன் மடங்கு அதிகரித்துள்ளதால் சர்வதேச சந்தைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என ரஷியாவைச் சேர்ந்த கச்சா எண்ணெய் உற்பத்தி நிறுவனமான ரோஸ்நெஃப்டின் தலைமை அதிகாரி இகோர் செச்சின் தெரிவித்தார். செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேச பொருளாதார கூட்டாண்மை நிகழ்ச்சியில் அவர் மேலும்பேசியதா வது:

(i) உலக எரிசக்தி நுகர்வு வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பாளராக இந்திய பொருளாதாரம் உருவெடுத்துள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் உலக அளவிலான மின்சாரத் தேவையில் இந்தியாவின் பங்கு 15 சதவீதமாக அதிகரிக்கும் என சர்வதேச எரிசக்தி முகமை கணித்துள்ளது.

(ii) அதேபோல் அடுத்த 10 ஆண்டுகளில் உலகளாவிய கச்சா எண்ணெய்த் தேவையில் இந்தியாவின் பங்கு 50 சதவீதமாக இருக்கும்.

இந்தச் சூழலில் ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்புக்கு கடும் சவால் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தியாவின் எரிசக்தி இறக்குமதி அதிகரித்து உலகச் சந்தைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

(iii) ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால் கச்சா எண்ணெய் விநியோகம் மட்டுமன்றி உரங்கள் விநியோகமும் தடைபட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியா, ஆப்பிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உணவு விலை பன் மடங்கு அதிகரித்துள்ளது. உலகளவில் கச்சா எண்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால்

ரஷிய விநியோகத்தை எந்த நாடும் புறந்தள்ள முடியாது.

(iv) சீனா மற்றும் இந்தியாவுடன் பொருளாதார ரீதியாக ரஷியா நட்புறவைப் பேணி வருவதால் இரு நாடுகளுக்கும் ரஷியா சீராக கச்சா எண்ணெய்யை விநியோகித்து பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாக்கிறது.

(v) 2022, ஏப்ரலில் இருந்து இந்தியா மற்றும் சீனாவுக்கு 40 பில்லியன் டாலர்கள் (ரூ.3.76லட்சம் கோடி) மதிப்பிலான கச்சா எண்ணெய் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(vi) வர்த்தகத் தடைகள், தன்னிச்சையான வரிகள் உலகப் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் மாற்று பரி வர்த்தனைகள் (டாலருக்கு மாற்று) மற்றும் வர்த்தக வழித்தடங்களை தேடும் சூழல் உருவாகியுள்ளது.

10. வீட்டு உபயோக திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (LPG) விலையில் உயர்வு

(i) விலை உயர்வு குறித்த விவரங்கள்

- 14.2 கிலோ எடையுள்ள வீட்டு உபயோக LPG சிலிண்டரின் விலை ₹29 உயர்த்தப்பட்டுள்ளது.
- சென்னையில் இதன் விலை ₹928.50-லிருந்து ₹957.50-ஆகவும், டெல்லியில் ₹913-லிருந்து ₹942-ஆகவும் உயர்ந்துள்ளது.
- மார்ச் மாதத்தில் ஏற்கனவே ₹60 உயர்த்தப்பட்டிருந்த நிலையில், கடந்த நான்கு மாதங்களில் மொத்த விலை உயர்வு ₹89-ஐ எட்டியுள்ளது.

(ii) உலகளாவிய புவிசார் அரசியல் பதற்றங்களின் தாக்கம்

- உலகளாவிய விநியோகச் சங்கிலியைப் பாதித்துள்ள மேற்கு ஆசியப் போரே இந்த விலை உயர்வுக்கு முக்கியக் காரணம் என்று மத்திய அரசு குறிப்பிடுகிறது.
- குறிப்பாக, கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதிக்கு மிக முக்கியமான போக்குவரத்துப் பாதையான 'ஹார்முஸ் நீரிணை' (Strait of Hormuz) முடக்கப்பட்டது எரிபொருள் விநியோகத்தை கடுமையாகப் பாதித்துள்ளது.
- இந்தப் நெருக்கடிக்கு முன்பு, இந்தியாவின் LPG இறக்குமதியில் 54% இந்த நீரிணை வழியாகவே மேற்கொள்ளப்பட்டது.

(iii) அதிகரிக்கும் சர்வதேசச் செலவுகள்

- இந்தியாவின் LPG இறக்குமதிச் செலவுகள் 'சவுதி ஒப்பந்த விலை'யுடன் (Saudi Contract Price - CP) இணைக்கப்பட்டுள்ளன; பிராந்திய ஸ்திரத்தன்மையின்மையால் இந்த விலை 46% அதிகரித்துள்ளது.
- LPG இறக்குமதிக்கான அடிப்படை விலை பிப்ரவரியில் ஒரு டன்னுக்கு $543-ஆக இருந்த நிலையில், இந்த மாதம் அது $790-ஆக உயர்ந்துள்ளது.

(iv) எண்ணெய் நிறுவனங்களின் நிதி இழப்புகள்

- பிப்ரவரியில் மேற்கு ஆசிய மோதல் தொடங்கியதைத் தொடர்ந்து, பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் ஒரு சிலிண்டருக்கு சுமார் ₹703

இழப்பைச் சந்தித்ததாகத் தெரிவித்தன.

- ஒரு சிலிண்டரை விநியோகிப்பதற்கான மொத்தச் செலவு ₹1,600-க்கும் அதிகமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.
- LPG துறையில் எண்ணெய் நிறுவனங்களின் இழப்பு, முந்தைய ₹41,338 கோடியிலிருந்து அதிகரித்து, கடந்த நிதியாண்டின் இறுதியில் ₹60,000 கோடியை எட்டியது.
- இந்த இழப்புகளைச் சரிசெய்ய உதவும் வகையில், எண்ணெய் நிறுவனங்களுக்கு ₹30,000 கோடி அளவிலான ஒருமுறை மானியத்தை வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

(v) கொள்முதல் பல்வகைப்படுத்தல் மற்றும் உள்நாட்டு வளர்ச்சி

- ஹார்முஸ் நீரிணை முடக்கத்திற்கு மத்தியிலும் தடையற்ற விநியோகத்தை உறுதிசெய்ய, இந்தியா தனது கொள்முதல் முறையைப் பல்வகைப்படுத்தியுள்ளது; அதன்படி அமெரிக்கா, கனடா மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதியை அதிகரித்துள்ளது.
- உள்நாட்டு எல்பிஜி (LPG) உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது; இது 32,000 டன்களிலிருந்து 52,000 டன்களாக, அதாவது 60 சதவீதம் அதிகரித்துள்ளது.

(vi) உலகளாவிய விலை ஒப்பீடு

- விலை உயர்வு இருந்தபோதிலும், பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் எல்பிஜி விலைகள் குறைவாகவே உள்ளன என்று மத்திய அரசு தெரிவிக்கிறது.
- பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம் மற்றும் இலங்கை போன்ற அண்டை நாடுகளை விடவும், அதேவேளையில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற வளர்ந்த நாடுகளை விடவும் இங்கு விலைகள் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SINCE 2008
MAKING YOU SERVE THE NATION